# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 11 | விவசாயமும் தொழிநுட்பவியலும் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..........................................................................

### பகுதி I

*** பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இலிங்க முறை இனப்பெருக்கத்தில் தாவரங்களால் உருவாக்கப்படுவது.
    1. உறிஞ்சி 2. குமிழ் 3. தண்டு கிழங்கு 4. வித்து
02. வித்தில் உள்ள வித்தகவிழையமானது.
    1. ஒருமடியமானது 2. இருமடியமானது
    3. முக்கியமானது 4. நான் மதியம் ஆனது
03. உயிருள்ள வித்து என அழைக்கப்படுவது.
    1. வாழ்தகவுள்ள வித்து 2. உறங்குநிலை அற்ற வித்து
    3. முனை திறனுள்ள வித்து 4. உறங்குநிலையற்ற வித்து.
04. ஒரு வித்திலை வித்து அல்லாதது.
    1. சோளம் 2. நெல் 3. இறுங்கு 4. மா
05. வித்திலைகளில் உணவு சேமிப்பை கொண்ட வித்து.
    1. கத்தரி 2. பனை 3. தென்னை 4. கம்பு
06. தரை மேல் வித்து முளைத்தலை கொண்டிராத பயிர்.
    1. நெல் 2. பயறு 3. கத்தரி 4. மிளகாய்
07. தரைக்கீழ் வித்து முளைத்தலை காண்பித்த தாவரம்.
    1. சோளம் 2. தென்னை 3. நெல் 4. கத்தரி
08. வித்து முளைப்பதற்கு செவ்வொளி அத்தியாவசியமாகத் தேவைப்படும் தாவரம்.
    1. கத்தரி 2. மிளகாய் 3. சலாது 4. வெண்டி
09. பளபளப்பான வித்துறை காரணமாக வித்து உறங்குநிலை காணப்படும் வித்து.
    1. இப்பில் இப்பில் 2. தக்காளி 3. பப்பாசி 4. தேக்கு
10. நிரோதிப்பு பதார்த்தங்களை கொண்ட வித்து.
    1. கொடித்தோடை 2. சிறகவரை 3. ஓக்கிட் 4. நிலக்கடலை
11. நடுகைக்கு உகந்த வித்து கொண்டிருக்க வேண்டிய முளைதிறன் சதவீதம்
    1. 90% இற்கு மேல் 2. 60% இற்கு மேல்
    3. 75% இற்கு மேல் 4. 85% இற்கு மேல்

12. அத்தாட்சிப் படுத்தப்பட்ட விதை நெல்லில் 500 கிராம் இல் அனுமதிக்கக் கூடிய களை வித்துக்களின் உச்சபட்ச எண்ணிக்கை.

1. 5 2. 10 3. 15 4. 20

13. தண்டுக் கிழங்கு மூலம் இனம் பெருகுவது.

1. சேம்பு 2. இஞ்சி 3. வள்ளி 4. உருளைக்கிழங்கு

14. எளிய சூரிய இனப்பெருக்கி .

1. நோய்த்தொற்றைக் குறைக்கும் 2. பீடைத்தாக்கத்தை குறைக்கும்
3. நீர் தேவையை குறைக்கும் 4. வேறு விடலை துரிதப்படுத்தும்

15. IAA எனப்படுவது.

1. தாவர வளர்ச்சி சீராக்கி 2. பீடை நாசினி
3. வளமாக்கி 4. திரவப் பசலை

16. இடை வைரத் துண்டங்கள் பயன்படுத்தப்படுவது.

1. ரோசா 2. மரவள்ளி 3. முருங்கை 4. இன்னல்

17. பட்டை வளையம் அகற்றல் நுட்பம் பயன்படுத்தப்படுவது.

1. ஒட்டுதல் 2. பதிவைத்தல் 3. இழைய வளர்ப்பில் 4. வில்லொட்டில்

18. ஒட்டுதலை மேற்கொள்ளத் தேவையற்ற உபகரணம் அல்லது பொருள்.

1. தளைக்கத்தரிக்கோல் 2. ஒட்டுக்கத்தி
3. செங்கட்டியர் 4. ஓட்டுநாடா

19. வித்துச் சிகிச்சை மேற்கொள்ளப்படுவது.

1. அறுவடையின்போது
2. விதைத்தலின் போது
3. களஞ்சியசாலையில்
4. பதப்படுத்தும்போது

20. பதிவைத்தல் மேற்கொள்ளப்படுவது.

1. தாய்த்வாரத்துடன் இணைந்துள்ள கிளையில்
2. தாய்த் தாவரத்திலிருந்து வேறாக்கியகிளையில்
3. தாய்த்தாவரத்துக்கு அருகாமையில்
4. தண்டுத் துண்டங்களில்

21. ஆளுகை இல்லங்களில் பயிர்ச்செய்கை தொடர்பான தவறான கூற்று.

1. விளைச்சல் அதிகரிக்கும் 2. தரம் அதிகரிக்கும்
3. குறைந்த செலவு ஏற்படும் 4. பீடைக்கட்டுப்பாடு நடைபெறும்

22. தற்காலிக ஆளுகை பயிர்ச் செய்கைக் கட்டமைப்பாக கருதமுடியாதது.

1. தனிச்செடி மறைப்பு 2. வரிசை மறைப்பு
3. பொலித்தீன் சுரங்கம் 4. எளிய சூரிய இனப்பெருக்கி

23. எளிய சூரிய இனப்பெருக்கியினுள் வெப்பநிலையானது

1. அதிகரிக்கும் 2. குறைவடையும் 3. கூடிக் குறையும் 4. மாறாது பேணப்படும்

24. நிரந்தரமான ஆளுகைப் பயிர்ச்செய்கைக் கட்டமைப்பாக அமைவது.

1. பொலித்தீன் சுரங்கம் 2. கண்ணாடியில்லம்
3. சலாகை இல்லம் 4. வலை இல்லம்

25. பொலித்தீன் மனைகளுக்குரிய பொலித்தீன் கொண்டிருக்க வேண்டிய இயல்பு அல்லாதது

1. Anti-mist 2. Anti trip 3. Anti dust 4. Decomposible

26. UV resistant polythene எனப்படுவது.

1. கழியூதாக்கதிர்களை வடிக்கும்
2. கழியூதாக்கதிர்களினால் சேதமடையாது
3. கழியூதாக்கதிர்களிலிருந்து பயிரைப் பாதுகாக்கும்
4. மேற்கூறிய எதவும் அல்ல

27. Insect Proof net எனப்படுவது.

1. பூச்சிகளைக் கொல்லும் 2. பூச்சிகளை விரட்டும்
3. பூச்சிகள் நுழைவதை தடை செய்யும் 4. பூச்சிகளைக் கவரும்

28. தாழ்நாட்டு பிரதேசங்களில் பொலித்தீன் கூடாரங்களில் ஏற்படும் பிரச்சனை.

1. வெப்பநிலை அதிகரிப்பு 2. RH அதிகரிப்பு
3. காற்றுத்தடை 4. அமுக்கம் அதிகரிப்பு

29. ‘Fan pad system’ ஆளுகை இல்லம் ஒன்றில்.

1. RH இனை குறைக்கும் 2. RH இனை அதிகரிக்கும்
3. வெப்ப நிலையைக் குறைக்கும் 4. வெப்பநிலையை அதிகரிக்கும்

30. வலை இல்லங்களினுள் வளர்க்கப்படும் பயிர்.

1. அந்தூரியம் 2. தக்காளி 3. ரோசா 4. அன்னாசி

31. இழைய வளர்ப்பூடகம்” தயாரிக்கப் பயன்படாத பொருள்.

1. சீனி 2. தாவர ஓமோன் 3. கூட்டெரு 4. ஏகார்

32. இழைய வளர்ப்பில் Explant ஆக பயன்படுத்த முடியாதது.

1. முனையம் 2. மகரந்த மணி 3. வேர்நுனி 4. கால் இழையம்

33. இழைய வளர்ப்பில் ஒட்சிசன் : சைற்றோகைனின் விகிதம் ஒன்றை விட குறைவாக உள்ள போது விருத்தியடைவது.

1. வேர் 2. அரும்பு 3. பூ 4. தோற்றடிப்பு கலம்

34. இழைய வளர்ப்பு நாற்றுக்களை புறச் சூழலுக்கு பழக்கும்போது இடம்பெறாத விடயம்.

1. ஒளிச்செறிவு அதிகரித்தல்
2. சார் ஈரப்பதனைக் குறைதல்
3. நாற்றுக்களின் வன்மையினை அதிகரித்தல்
4. சார்ஈரப்பதன் அதிகரித்தல்

35. வைரசுத் தொற்றற்ற நாற்றுக்களைப் பெற இழைய வளர்ப்பில் பயன்படுத்த வேண்டியது.

1. பிரியிழையங்களை
2. மாறிழையங்களை
3. புடைக்கல் விழயங்களை
4. நிலையிழையங்களை

36. இயற்கையான அசேதன வளர்ப்புடகமாக அமைவது.

1. பரல்
2. உயிர்க்கரி
3. றொக்வூல்
4. உமி

37. மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் போசனையூடகமாகப் பயன்படுத்தப்படுவது.

1. அல்பேட்கரைசல்
2. யூறியாகரைசல்
3. சேதனத்திரவப்பசளை
4. நீர்

38. மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் போசனை ஊடகம் கொண்டிருக்க வேண்டிய PH

1. 9.5
2. 3.5
3. 6.5
4. 12

39. மண்ணின்றிய பயிர்ச்செய்கையில் போசனை ஊடகம் கொண்டிருக்க வேண்டிய EC

1. 4ds/cm
2. 7ds/cm
3. 2ds/cm
4. 0.2ds/cm

40. அன்னாசியில் ஒரு வருட காலத்தில் பழங்களை உருவாக்கக்கூடிய உறிஞ்சிகள்

1. முடி
2. காம்புஉறிஞ்சி
3. அச்சுஉறிஞ்சி
4. கிளை உறிஞ்சி

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

**முதலாம் வினாவுக்கும் ஏனைய வேறு நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

(01) உயிர்ப்பல்வகைமைக் காப்பும் சூழல் நேயமும் நீடித்து நிலைக்கக்கூடிய விவசாயத்துக்கு வழிவகுக்கும்.

01. இலங்கையின் ஏற்றுமதி விவசாயத்தில் பெரும்பங்கு வகிக்கும் மூன்று பெருந்தோட்டப் பயிர்களை எழுதுக.
02. இலங்கையின் பிரதான காலநிலை வலயங்களையும், தரைத்தோற்ற வலயங்களையும் எழுதுக.
03. பயிர்ச் செய்கையில் சாரீரப்பதனின் செல்வாக்குகள் மூன்றினை குறிப்பிடுக.
04. இலங்கைக்கு மழை வீழ்ச்சியைப் பெற்றுத்தரும் காற்றுக்களைப் பெயரிடுக.
05. களிவகை மண்ணுக்கும் மணல் மண்ணுக்கும் இடையிலான வேறுபாடுகள் மூன்றினை எழுதுக.
06. விவசாயத்தில் மண் இழையமைப்பின் முக்கியத்துவங்கள் நான்கினை எழுதுக.
07. பின்வரும் குடும்ப தாவரங்களுக்கு இவ்விரண்டு பயிர்களை உதாரணமாக எழுதுக

    i. குக்குபிற்றேசியே  b. மல்வேசியே  c. சொல்னேசியே

08. பயிர்களை களத்தில் ஸ்தாபிக்கும் முறைகள் மூன்றினை குறிப்பிடுக.
09. வெவ்வேறு வகையான நாற்று மேடைகளுக்கு 4 உதாரணங்கள் குறிப்பிடுக.
10. நவீன நீர்ப்பாசன முறைகள் இரண்டை எழுதுக.

(02) புதிய பயிர்ப்பேதங்களை உருவாக்குவதில் கலப்புப் பிரதான பங்கினை வகிக்கின்றன.

01. பொதுமைப்பாடான “பூ” இனை வரைந்து பாகங்களை குறிக்க
02. வித்து உருகுநிலை என்றால் என்ன
03. ஒருவித்திலை, இரு வித்திலை வித்துக்களுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டினை குறிப்பிடுக.
04. வித்து முளைத்தலுக்கு அவசியமான காரணிகளை பட்டியலிடுக.
05. சான்றுபடுத்தப்பட்ட விதை நெல்லின் தர நியமங்களை எழுதுக.

(03) பதியமுறை இனப்பெருக்கத்தில் தாய்தாவரத்தினை ஒத்த நாற்றுக்களை உருவாக்க முடியும்.

01. இயற்கையான புதிய முறை இனப்பெருக்க கட்டமைப்புக்களை பெயரிட்டு உதாரணங்களை எழுதுக.
02. மூன்று வகையான தண்டுத் துண்டங்களையும் குறிப்பிட்டு ஒவ்வொரு உதாரணங்களை எழுதுக.
03. எளிய சூரிய இனப்பெருக்கு ஒன்றினுள் தண்டுத்துண்டத்தினை வேர்கொள்ளச் செய்யும் முறையை வரிப்படத்தினால் விளக்குக.
04. வேர் விடலைத் தூண்டகக்கூடிய செயற்கையானஓட்சின்கள் அல்லது தாவர வளர்ச்சி சீராக்கிகள் மூன்றினை எழுத்துக.
05. காற்றுப் பதி வைத்தலை வரிப்படத்தினால் விளக்குக.

(04) ஒட்டுதல் செயன்முறையினால் அரிய பயிர்ப்பேதங்களை பேண்தகு முறையில் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல முடியும்.

01. ஒட்டுக்கட்டை கொண்டிருக்க வேண்டிய பிரதான இயல்புகளை குறிப்பிடுக.
02. ஒட்டுமுளை கொண்டிருக்க வேண்டிய பிரதான இயல்புகளை எழுதுக.
03. ஒட்டுதல் வெற்றியளிக்காமைக்கு மூன்று காரணங்களை எழுதுக.
04. ஒட்டுதல் மூலம் பாதுகாக்கப்படும் உமது பிரதேசத்திலுள்ள மாமர வர்க்கங்கள் நான்கினை எழுதுக.
05. வணிக ரீதியில் ஓட்டுதல் மூலம் நல்லின நாற்றுக்களை உருவாக்கும் நாற்றுப்பண்ணையினை நிறுவும் போது ஏற்படும் தேவைகள் நான்கினை குறிப்பிடுக.

(05) ஆளுகை சூழல் நிபந்தனைகளின் கீழ் பயிர் செய்வதன் மூலம் விளைச்சலின் அளவு, தரம் அதிகரிப்பதுடன் நிலைபேறான விவசாயத்தின் இன்றியமையாத தேவை நிறைவேற்றப்படுகிறது

01. ஆளுகைச்சூழல் நிபந்தனைகளில் ஆளுகை செய்யப்படும் காரணிகளைப் பட்டியலிடுக.
02. பாவனைக் காலத்தின் அடிப்படையில் பயிர்செய்கைக் கட்டமைப்புகளை பாகுபடுத்துக

03. பொலித்தீன் கூடாரங்களிலுள்ள வெப்பநிலை அதிகரிப்பை கட்டுப்படுத்தக்கூடிய உத்திகளை எழுதுக.

04. பொலித்தீன் கூட்டங்களினுள் பயிர் செய்வதன் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் எழுதுக.

05. மண்ணின்றிய பயிர்ச் செய்கையில் பயன்படுத்தப்படும் நடுகை ஊடகங்களைப் பட்டியலிடுக.

(06) நுண்ணினப்பெருக்கம் எனப்படுவது இழைய வளர்ப்பு தொழினுட்பத்தை பயன்படுத்தி ஏராளமான நாற்றுக்களை உற்பத்தி செய்யும் நவீன தொழில்நுட்பமாகும்

01. இளைய வளர்ப்பூடகம் தயாரிப்பதற்கு தேவையான பதார்த்தங்களை எழுதுக

02. இழைய வளர்ப்பில் பயன்படுத்தப்படும் பல்வேறு கிருமியழித்தல் முறைகளை குறிப்பிடுக.

03. இழைய வளர்ப்பில் Explant இனை கிருமியளிக்கும் முறையினை சுருக்கமாகக் குறிப்பிடுக.

04. இளைய வளர்ப்பின் மூலமான நுண்ணினப்பெருக்க செயன்முறையின் படிமுறைகளை எழுதுக.

05. இழைய வளர்ப்பு ஆய்வு கூடம் ஒன்றை நிறுவுவதற்கு அவசியமான தொழினுட்பத் தேவைகள் நான்கினை குறிப்பிடுக.